சுருக்கம்

கலையும் பண்பாடும் – சிவகங்கை மாவட்டம், அருள்மிகு ஸ்ரீ பிள்ளைவயல் காளியம்மன் கோயில் திருவிழா 16.07.2018 முதல் 18.07.2018 வரை நடைபெற்றது – கலை நிகழ்ச்சிகள் நடத்தியது – ரூ. 1,50,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (ப) எண்.49 நாள்: 09–04–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், பங்குனி 26

படிக்கப்பட்டது

கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். 3632 / இ1 / 2018, நாள்: 07.11.2018

*****

**ஆணை:–**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் அருள்மிகு ஸ்ரீ பிள்ளைவயல் காளியம்மன் கோயிலில் 16.07.2018 முதல் 18.07.2018 வரை நடைபெற்ற பூச்சொரிதல் திருவிழாவில் கலை பண்பாட்டுத் துறையின் மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கீழே அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ.1,50,000/– தொகையினை நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண் | நாள் | கலை நிகழ்ச்சிகள் விவரம் | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 16.07.2018 | திரு.மோ.பாண்டி குழுவினர் நையாண்டி மேளம் கரகம் | 15,000/– |
| 2. | 16.07.2018 | திரு.வி.வெள்ளைப்பாண்டி குழுவினரின் சேவையாட்டம் | 10,000/– |
| 3. | 16.07.2018 | திரு.எஸ்.ஹரி குழுவினரின் நாத சங்கம் | 15,000/– |
| 4. | 17.07.2018 | திரு.அ.தாளமுத்து குழுவினரின் ராஜாராணி ஆட்டம் | 15,000/– |

| | | | |
|---|---|---|---|
| 5. | 17.07.2018 | திரு.முத்து லெட்சுமணராவ் குழுவினரின் தோற்பாவைக்கூத்து | 8,000/– |
| 6. | 17.07.2018 | ஸ்ரீ நவரத்னாலயா குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சி | 15,000/– |
| 7. | 18.07.2018 | திருமதி பி.எஸ்.கோமதி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி | 15,000/– |
| 8. | 18.07.2018 | திரு.எஸ்.சோனைமுத்து குழுவினரின் தப்பாட்டக் கலை நிகழ்ச்சி | 12,000/– |
| 9. | 16.07.2018 முதல் 18.07.2018 வரை | அழைப்பிதழ் மற்றும் ப்ளக்ஸ் அச்சடித்தமைக்காக | 4,750/– |
| 10. | 16.07.2018 முதல் 18.07.2018 வரை | சிவகங்கை நகராட்சிக்கு | 4,500/– |
| 11. | 16.07.2018 முதல் 18.07.2018 வரை | மூன்று நாள் ஆடியோ இயக்குபவர் படி போக்ஸ் பல்பு | 18,000/– |
| 12. | 16.07.2018 முதல் 18.07.2018 வரை | விழா மேடை ஜெனரேட்டர் செலவினம் | 18,000/– |
| | | மொத்தம் | 1,50,250/– |

2. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் அருள்மிகு ஸ்ரீ பிள்ளைவயல் காளியம்மன் கோயிலில் 16.07.2018 முதல் 18.07.2018 வரை நடைபெற்ற திருவிழாவில் கலை பண்பாட்டுத் துறையின் மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2205 00 102 JA 30903)

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 13762/ நிதி(கல்வி–II)துறை / 2019, நாள்.27.03.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை

<u>நகல்:-</u>
நிதி(சு,ப(ம)அ.நி)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

09/04/19

பிரிவு அலுவலர்

9.4.19